செ.வெ.184 நாள் 10-3-08

# மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் தொழில்நுட்ப உதவியாளர்/ பொது முதலாள் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்குதல்

தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத்துறை 15.8.1955 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு தற்போது மாநிலம் முழுவதும் 20 பணிமனைகளை / 10 எரிபொருள் கிடங்குகள் கொண்டு இயங்கி வருகிறது. இத்துறையில் 731 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இத்துறை மாநிலம் முழுவதும் உள்ள 13,800 அரசு துறை வாகனங்களை பழுது நீக்கம் செய்து பராமரித்து வருகிறது. ஆண்டொன்றுக்கு 25000க்கு மேற்பட்ட வாகனங்களின் பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது புதுரக வாகனங்கள் அரசு துறையில் கொள்முதல் செய்யப்படுவதால் அவற்றை நல்ல முறையில் பராமரித்து தொழில்நுட்ப தொழிலாளர்களுக்கு வாகன தயாரிப்பாளர்களிடம் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது வாகனங்களுக்கு தேவையான விரைவாக செலவாகும் உதிரிகள், உருளைப்பட்டை, மின்கலன் மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு முக்கிய பணிமனைகளில் இருப்பு வைக்கப்பட்டு, பணிமனைகளின் தேவைக்கேற்ப உடனுக்குடன் விநியோகம் செய்யப்பட்டு, வாகனங்களின் பழுதுகள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யப்படுகிறது.

நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ள காலிப் பணியிடங்கள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் சீரிய முயற்சியால், நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, காலிப் பணியிடங்கள் நிரப்ப ஆணைகள் வழங்கப்பட்டது. முதற்கட்டமாக 10.03.2008 அன்று தொழில்நுட்ப உதவியாளர் / பொது முதலாள் ஆகிய பணியிடங்களில் 7 பேருக்கு பணி நியமன ஆணை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் பொற்கரங்களால் வழங்கப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.